ॐ

॥ सद्गुरुभ्यो नमः ॥

॥ श्रीमच्चरणवैभवायै नमः ॥

## ॥ श्रीमत्सुन्दरदीक्षितानां तुर्याश्रमस्वीकारपुण्यावसरे अभिनन्दनप्रकटनविधौ ॥

स्वस्ति । अस्मत्प्रविख्यातसिद्धमल्लीगुरुपरम्परागतानां
श्रीविमर्शानन्देन्द्रसरस्वतीमहास्वामिनां संपूर्णानुग्रहपुरःसरं
तत्पुण्यकराब्जलब्धपूर्णाभिषेकवैभवानां श्रीमत्सुन्दरदीक्षितानां
श्रीज्ञानानन्दनाथदीक्षाभिधानां
चिरकालानुष्ठितश्रीविद्योपास्तिसौरभ्यमण्डितानां
तुर्याश्रमस्वीकारपुण्यावसरे सप्रश्रयं
सविनयं सामोदं शार्दूलविक्रीडितनामके वृत्ते रचितं श्लोकपञ्चकमिदं
अस्मदीयानां अभिनन्दनसमर्पणविधौ
सत्संप्रदायानुसारेण समर्प्यतेऽधुना।
( " सूर्याश्वैः यदि मः सजौ सततगाः शार्दूलविक्रीडितम् " - इति
प्रोक्तवृत्तस्य लक्षणं भवति। )

=====================================

हंसःसोऽहमिति प्रसिद्धविमलामोदप्रदं शाश्वतं
सन्मन्त्रद्वितयं सदा गुरुपदस्मृत्या जपन्तं विभुम् ।
दीप्तं भास्करसुप्रकाशकिरणैः सुप्रीतिभाजं सतां
श्रीमत्सुन्दरमार्यमाप्तललितोपास्तौ निविष्टं स्तुवे ॥ (१)

( ஶ்ரீத்ரிபுருஷ-குருபாதுகா வித்யையை த்யானம் செய்யும் போது) ப்ரசித்தமானதும், பரிசுத்தம் நிறைந்த மனஸ்-ஸந்துஷ்டியை தரவல்லதும், சாஸ்வதமான உண்மையை ப்ரகடனம் செய்கிறதுமான "ஹம்ஸ: ஸோஹம்" என்கிற இரண்டு திவ்ய மந்த்ரங்களை சதா ஜபிப்பவரும், ஆத்மஸ்வரூபமான ஸூர்ய பகவானின் ப்ரகாசம் நிறைந்த கிரணங்களால் தேஜஸ்வியாக விளங்குபவரும், பெரியோர்களின் அன்புக்கு பாத்திரமானவரும், க்ரமமாக அடைந்த ஶ்ரீவித்யோபாஸ்தியில் ஸ்திரமான ஈடுபாடு உள்ளவருமான ஶ்ரீஸுந்தர தீக்ஷிதர் அவர்களை ஸ்துதி செய்கிறேன். ('பாஸ்கர ஸுப்ரகாச' என்ற பதங்களால் ஸ்வாமிகளின் ஆச்ரமநாமமும் மற்றொரு முறையில் குறிக்கப்பட்டதாக விளங்குகிறது ).

मीनाक्षीमतुलप्रभावसहितां हालास्यनाथप्रियां
भक्तेभ्यः स्थिरभक्तिदानचतुरां देव्याश्च सन्मन्त्रिणीं ।
तां सन्तोष्य नुतिप्रणामबहुलैः बाल्येऽपि लब्धास्पदं
श्रीमत्सुन्दरमार्यमार्यविनुतं शान्तिप्रदं संस्तुवे ॥ (२)

ஶ்ரீஹாலாஸ்ய க்ஷேத்திரத்தின் நாயகரான சோமஸுந்தரேஸ்வர பெருமானின் க்ருஹிணீ-பதத்தை அலங்கரிப்பவளும், ஒப்புயர்வற்ற ப்ரபாவங்கள் நிறைந்தவளும், பக்தர்களுக்கு அம்பாளிடம் ஸ்திரமான பக்தியை அருளுவதில் மிக்க வல்லமை படைத்தவளும், ஶ்ரீலலிதாம்பிகையின் மந்த்ரிணீயாக திகழ்கிறவளுமான ஶ்ரீமீனாக்ஷிதேவியை பால்யவயதிலேயே ஸ்தோத்ரங்கள் படிப்பதாலும், நமஸ்காரங்களாலும் சந்தோஷமடையச்

செய்து, பெரியோர் மத்தியில் மதிப்புக்குரிய ஸ்தானத்தை அடைந்தவரும், போற்றப்படுபவரும், மனதுக்கு சாந்தியை தருபவருமான ஸ்ரீஸுந்தர தீக்ஷிதாளை ஸ்ரத்தையுடன் துதிக்கிறேன்.

अन्तर्यागविधिं प्रसन्नमनसाऽनुष्ठाय पूर्वं ततः

सत्यज्ञानसुखात्मिकां हृदि लसत्स्वात्मेति भावेन तां ।

पूर्णामद्भुतचक्रराजनिलयां संपूजयन्तं मुदा ।

श्रीमत्सुन्दरमार्यमाप्तसुजनैः संमाननीयं भजे ॥ (३)

(க்ரமமாக ஸாமான்யார்க்ய-விசேஷார்க்ய ஸ்தாபனம் சகிதம் செய்யப்படும் ஸ்ரீசக்ர ஸபர்யையில்) முதலில், அந்தர்யாகம் என்று சொல்லப்படும் உயரிய த்யான-ரூபமான முறையில் தேவியை, ப்ரஸன்னமான மனதால் பூஜை செய்து, அதற்குப் பிறகு ஆவாஹனாதி க்ரியா-கலாபங்களுடன், ஸச்சிதானந்த-ஸ்வரூபிணியான ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரியை, தன்னுடைய ஹ்ருதயத்தில் விளங்கும் ஆத்மஸ்வரூபத்திலிருந்து வேறுபட்டவளல்ல என்ற திடமான பாவனையுடன், ஸ்ரீசக்ரத்தில் பூர்ணமாக ஜ்வலிக்கும் ஸ்ரீலலிதாம்பிகையாக நிறைந்த சந்தோஷம் கூடிய மனதுடன் பூஜிப்பவரும், ஆப்த பந்துக்களால் போற்றத் தகுந்தவருமான ஸ்ரீசுந்தர தீக்ஷிதாளை வணங்குகிறேன்.

पूजाहोमजपादिदिव्यनतिभिः लब्धप्रसादं प्रभुं

षट्पारायणमित्यमोघफलदे विद्याक्रमे सुस्थितम् ।

तत्त्वग्रामविशोधनेन विलसत्चित्स्फूर्तिभूषान्वितं

श्रीमत्सुन्दरमार्यमाश्रितजनैः संसेव्यमीडे मुदा ॥ (४)

ஸ்ரீசக்ரபூஜை, ஸ்ரீவித்யா ஹோமம்,ஸ்ரீவித்யா உபாஸ்தியில் சம்பந்தப்பட்ட பல மந்த்ரங்களின் ஜபம், ந்யாஸம் முதலிய விவித க்ரியைகளினால் அம்பாளின் ப்ரஸாதத்தை அடைந்த மஹனீயரும், ஷட்-பாராயணம் (நவநாத-கடிகா-தத்வ-நித்யா-நாம-மந்த்ர பாராயணங்கள் என்று ஆறுவிதமானவை) என்கிற நிரந்தரமான சுபபலன்களை கொடுக்கக் கூடிய ஸ்ரீவித்யா முறைகளின் அனுஷ்டானத்தில் ஸ்திரமானவரும், ஸபர்யையில் ஒரு முக்ய அங்கமாகிய 'தத்வசோதனம்' என்ற க்ரியையினால் ஹ்ருதய கமலத்தில் ஏற்பட்ட ஆத்மஸ்புரணத்தையே அணிகலனாக் கொண்டவரும், தன்னை அண்டிய மக்களால் ஸேவிக்கத் தகுந்தவருமான ஸ்ரீசுந்தர தீக்ஷிதாளின் பெருமையை சந்தோஷத்துடன் எடுத்துரைக்கிறேன்.

सद्भक्त्या हि सुवासिनीः त्रिशतसंख्याकाः त्रिशत्यात्मकैः
देव्याः नामभिरग्रपूजनविधौ चाराध्य पुण्यप्रदैः ।
श्रीमत्सुन्दरदीक्षितो गुरुकृपाढ्ये सन्निधाने शुभे
स्वीकृत्याश्रममुत्तमं विपुलधीः तुर्याश्रमी शोभते ॥ (५)

பரிபூர்ணமான ஸ்ரத்தையுடன் கூடிய பக்தியோடு, முன்னூறு ஸ்ரீசுவாஸினிகளை அம்பாள் ஸ்வரூபமாக பாவித்து, ஸ்ரீலலிதா த்ரிசதியில் விளங்குகிற புண்யமான நாமாவளியால் அவர்களை க்ரமமாக விதிப்படி (துரீயாஸ்ரம ஸ்வீகாரத்திற்கு பூர்வாங்கமாக த்ரிசதீ போஜனம் என்கிற க்ரமப்படி) ஆராதனம் செய்து, ஸ்ரீசுத்தமல்லி புண்யக்ஷேத்திரத்தில் நமது பராபரகுரு

ஸ்ரீகாமேஸ்வரானந்த நாதாள் அவர்களின் பரிபூர்ண க்ருபை நிறைந்த மஹாஸன்னிதானத்தில், பஹுசாஸ்த்ரஞானம் நிறைந்த ஸ்ரீசுந்தர தீக்ஷிதாள் (ஸ்ரீ ஞானாநந்த நாதாள்) உத்தமமான ஸந்யாச ஆஸ்ரமத்தை ஸ்வீகரித்து, துர்யாஸ்ரமியாக ப்ரகாசிக்கிறார் அன்றோ !!!

॥ अहंपदलक्ष्यार्थभूता श्रीमहात्रिपुरसुन्दरी निरुपाधिकसंवित्स्वरूप-

महाकामेश्वराभिन्ना कारुण्यपाथोनिधिः समस्तजननी

मङ्गलं मङ्गलानां विजयते ॥

**॥ சுபம் ॥**